# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண்.208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை– 600 106
தொலைபேசி எண்: 2363 5011
மின்னஞ்சல் – tnsec.tn@nic.in இணையதளம் – www.tnsec.tn.nic.in

செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண். 51 /2021** **நாள். 19 .10.2021**

**ஊரக உள்ளாட்சி தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நாளை (20.10.2021) பதவி பிரமாணம் எடுத்துக்கொள்வார்கள் – தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அறிவிப்பு**

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய 9 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தல்கள் 06.10.2021 மற்றும் 09.10.2021 ஆகிய நாட்களில் இரண்டு கட்டங்களாகவும் ஏனைய 28 மாவட்டங்களில் நிரப்பப்படாத மற்றும் காலியிடம் ஏற்பட்ட பதவியிடங்களுக்கு தற்செயல் தேர்தல்கள் 09.10.2021 அன்றும் தேர்தல்கள் நடத்தப்பட்டு, 12.10.2021 அன்று வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

மேற்படி தேர்தல்களில், மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர், கிராம ஊராட்சி தலைவர் மற்றும் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் ஆகிய பதவியிடங்களுக்கு போட்டியின்றி மற்றும் போட்டி மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்கள் 20.10.2021 அன்று காலை 10.00 மணிக்கு தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலர்கள்/உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் முன்னிலையில் அந்தந்த மாவட்ட ஊராட்சி அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மற்றும் கிராம ஊராட்சி அலுவலகத்தில் பதவி பிரமாணம் எடுத்துக்கொள்ள தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் நாள் மற்றும் நேரத்தினை நிர்ணயம் செய்துள்ளது.

எனவே, தேர்தெடுக்கப்பட்ட வேட்பாளர்கள் அனைவரும் 20.10.2021 அன்று காலை 10.00 மணிக்கு அந்தந்த ஊராட்சி அலுவலகத்தில் பதவி பிரமாணம் எடுத்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு பதவி எடுத்துக்கொண்டவர்கள் மட்டுமே 22.10.2021 அன்று நடைபெறவுள்ள மாவட்ட ஊராட்சி தலைவர் மற்றும் துணைத் தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் மற்றும் கிராம ஊராட்சி துணைத் தலைவர் தேர்தலில் போட்டியிடவோ அல்லது பங்களிக்கவோ அல்லது வாக்களிக்கவோ தகுதியுடையவர் ஆவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய அணைப்படி)

19/10/2021

மக்கள் தொடர்பு அலுவலர்